செய்தி வெளியீடு எண்.344 நாள் 22.9.2006

# செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர், கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (22–9–2006) – தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் குறித்த சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் குழு உறுப்பினர்களான மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், திரு. டி. சுதர்சனம், திரு. கோ.க. மணி, திரு. சி. கோவிந்தசாமி, திரு வை. சிவபுண்ணியம், திரு. எச். அப்துல் பாசித், திரு. ஜெகன் மூர்த்தி மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இன்றைய கூட்டத்தில் 15–9–2006 அன்றும் 16–9–2006 அன்றும் தமிழ் நாட்டில் உள்ள 145 பெரியார் நினைவு சமத்துவப் புர இல்லங்களிலும், மறுவாழ்வு இல்லங்களிலும், சென்னையில் இரண்டு இடங்களில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளிலும் மற்றும் நீலகிரி மாவட்ட பழங்குடியினர் இல்லங்களிலும், சுமார் 30 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகள் கொள்முதல் செய்வதற்கான நெறிமுறைகளைப் பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனைக்குப் பின்னர் 25 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்கு உலகளாவிய ஒப்பந்தப் புள்ளி கோருவதென்றும்; கொள்முதல் செய்யப்படும் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளில் தரமான பாகங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்வதற்காக சர்வ தேச தரச் சான்றிதழ் பொருந்திய விரிவான தொழில் நுட்பக் குறியீடுகளை நிர்ணயிப்பதென்றும்; ஒப்பந்தப் புள்ளிகள் கோரும்போது அதில் பங்கு பெறும் ஒப்பந்தத் தாரர்களுக்கு குறைந்த பட்சத் தகுதிகளை நிர்ணயிப்பதென்றும்; ஒப்பந்தப் புள்ளிகளைக் கோருவதற்கான விளம்பரத்தை மாநிலத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதல் பெற்று அக்டோபர் முதல் வாரத்தில் வெளியிடுவதென்றும்; ஒப்பந்தப் புள்ளிகளைத் திறந்து கொள்முதல் செய்வதற்கான ஆணை வழங்குவதற்கு முன்னர் மீண்டும் இந்தக் குழுவின் கூட்டத்தைக் கூட்டி, அதிலே பரிசீலித்து முடிவு செய்வ தென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங் களுக்கும் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் வரை இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதென்றும், அதற்கென தேவையான நிதி ஒதுக்கீடு செய்து நிறைவேற்றுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9